DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.2

| | |
|---|---|
| Name : **திருமதி.உபைதா** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் ஆஜர்
**நாள்: 19.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**<u>முதல் விசாரணை</u>**

1. எனது இறந்து போன மருமகன் பெயர் அபிபுல்லா. அவருக்கும், எனது மகளான அனீஸ் பாத்திமா என்ற 1-ம் எதிரிக்கும் 20 வருடங்களுக்கு முன்பு திருமணமானது. சுமார் 10 ஆண்டுகள் நான் அவர்களுடன் குடியிருந்து வந்தேன். எனது மருமகன் இறப்பதற்கு ஒரு வருடம் முன்பு வரை நான் அவர்களுடன் வசித்து வந்தேன். எனது மருமகன் எலுமிச்சம்பழம் வாங்கி விற்பனை செய்யும் கமிஷன் வேலை செய்து வந்தார். எனது மகளான முதல் எதிரி சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பு வீட்டிலேயே ஒரு பெட்டி கடை ஆரம்பித்திருந்தார் அந்த பெட்டி கடையை அவர் பார்த்துக் கொண்டார். எனது மகளுக்கு பாசித் ரகுமான் என்ற மகனும் நிஷா பானு என்ற மகளும் இருந்தார்கள். எனது மருமகன் 2019 ஆம் ஆண்டு இறந்த பிறகு அவர்கள் தற்போது எங்களுடன் வசித்து, எங்கள் பராமரிப்பில் இருந்து வருகிறார்கள்.

2. சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே 2-ம் எதிரி ராஜபாண்டியை தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாக சொல்லி 1-ம் எதிரி எங்களிடம் சொல்லி வந்தார். நாங்கள் வீட்டில் குழந்தைகள் இருப்பதாக சொல்லி அவ்வாறு செய்யக்கூடாது என அறிவுரை சொன்னோம், இருந்தும் எதிரிகள் இருவரும் கேட்கவில்லை. காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக

புகார் தெரிவிக்கப்பட்டு தனக்கு குழந்தைகள் வேண்டாம் என 1ம் எதிரி எழுதிக் கொடுத்துவிட்டு அதன் காரணமாக நாங்கள் அவர்களது குழந்தைகளை அழைத்துக் கொண்டு எனது மகனுடன் வீட்டிற்கு வந்து விட்டோம்.

3. எனது மருமகன் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே தனக்கு உணவில் ஏதோ வாடை வருகிறது என்றும், தன்னால் சாப்பிட இயலவில்லை என்று எனது மருமகன் எங்களிடம் புகார் தெரிவிக்க எங்கள் வீட்டில் இருந்து அவருக்கு சாப்பாடு கொடுத்து அனுப்பினோம். போலீசாரிடம் இது பற்றி நாங்கள் புகார் தெரிவிக்க போலீசார் என்னை ஒரு மாதம் எனது மருமகன் வீட்டில் எனது மருமகனுக்கு துணையாக இருக்கச் சொன்னார்கள். எனக்கு ஒரு முறை 1ம் எதிரி காபியில் தூக்க மாத்திரை போட்டதன் காரணமாக நான் அயர்ந்து தூங்கி விட்டேன், மறுநாள் இருந்து எனக்கு காபி வேண்டாம் என தெரிவித்து விட்டேன்.

4. 1ம் எதிரி வீட்டிற்கு 2-வது எதிரி ஜெயபாண்டி வருவதும், போதுமாக இருந்தார். அவர்கள் இருவரும் ஒன்றாக இருப்பதை பார்த்துவிட்டு நான் எனது மகளை அடித்தேன். 1ம் எதிரி தான் அப்படித்தான் இருப்பேன் என்றும், என்னை அவர்கள் வீட்டுக்கு வர வேண்டாம் என சொன்னார், அதன் பிறகு நான் எனது மகன் வீட்டிற்கு சென்று விட்டேன். எனது பேத்தியிடம் வீட்டில் இருந்து பார்த்துக்கொள்ள சொல்லிவிட்டு நான் வந்து விட்டேன் எனது பேத்தி அன்றைய தினம் இரவு 11.00 மணிக்கு தனது அம்மாவையும், 2-ம் எதிரியையும் காணவில்லை என்று தகவல் சொன்னார். நான் அவர்கள் வீட்டிற்குச் சென்று எனது பேத்தியை அழைத்துக்கொண்டு எனது வீட்டிற்கு வந்து விட்டேன். நான் எனது பேத்தியிடம் எனது மகள் குடிப்பதற்கு ஏதேனும் கொடுத்தால் குடிக்க வேண்டாம் என எச்சரித்தேன். அவ்வாறு எனது பேத்தியை நான் அழைத்துச் சென்ற பிறகு 20 நாள் கழித்து எனது மருமகன் இறந்ததாக எங்களுக்கு செய்தி வந்தது. எனது மருமகன் இறந்த தினத்தன்றும் 1ம் எதிரி என்னை பிடித்து தள்ளிவிட்டு 2-ம் எதிரியுடன் சென்று விட்டார். நீதித்துறை நடுவர் முன்பு இது பற்றி விசாரிக்கும் போது நான் சாட்சி அளித்துள்ளேன். போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள். தற்போது 1ம் எதிரி 2-ம் எதிரியுடன்

ஒன்றாக வசித்து வருகிறார். போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள். நீதித்துறை நடுவர் முன்பு நான் வாக்குமூலம் அளித்துள்ளேன். அந்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அ.சா.ஆ.3.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை, சாட்சி விசாரணை 04.11.2025–ம் தேதியன்று உத்தரவிடப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் அவகாசம் வழங்கப்படும் இன்று எதிரிகள் தரப்பு வழக்கு ஆஜரில்லை என்பதால் என்பதால் இலவச சட்ட உதவி மையத்திலிருந்து இலவச சட்ட உதவி வழக்கறிஞரை (LADCS) எதிரிகளுக்கு நியமிக்கப்பட்டு இலவச சட்ட உதவி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை)**

1. உணவில் வாடை அடிப்பதாக மருமகன் புகார் தெரிவித்த போது நாங்கள் அதை சோதித்துப் பார்த்தோமா என்றால் சோதித்துப் பார்ப்பதற்கு எங்களுக்கு அவகாசம் இல்லை. ரேஷன் அரிசியாக இருப்பதால் வாடை அடிக்கலாம் என்று நாங்கள் அறிவுரை சொன்னோம். எனது மருமகன் இறப்பதற்கு முன்பு நாங்கள் எனது மகளுக்கு எதிராக புகார் தெரிவிக்கவில்லை. எனது மகளை நான் வீட்டில் கண்டித்ததாக தற்போது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை போலீசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இது சம்பந்தமாக ஜமாத்தில் நாங்கள் புகார் தெரிவித்திருந்தோம். ஜமாத் சொன்ன கட்டுப்பாட்டிற்கும் எதிரிகள் கட்டுப்படவில்லை.

2. எனது மருமகன் வீட்டில் நான் குடியிருக்கும் போது 2–ம் எதிரி 1ம் எதிரியை பார்ப்பதற்கு வருவார் என்றும், நான் அவரை கண்டித்ததாக முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. அந்த மாதிரி சங்கதிகள் எதுவும் போலீஸ் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது மருமகன் இறந்த பிறகு கூட வெகு நாட்கள் கழித்தும் கூட அவர் எதற்காக இறந்து போனார் என்ற விபரம் எங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது மருமகன் ஏற்கனவே TB – நோயால் பாதிக்கப்பட்டு உடல்நிலை சரியில்லாமல் வெகு நாட்களாக இருந்து வந்தார் என்றால் சரியல்ல, அவர் உடல்நிலை சரியாகி இரண்டு வருடங்கள் நல்ல நிலையில் தான் இருந்தார், வியாபாரமும் செய்து வந்தார்.நான் கூறுவது

உண்மை இல்லை என்றும், அவ்வாறு உண்மையிலேயே சம்பவம் நடைபெற்றிருந்தால் எனது மருமகன் உயிருடன் இருக்கும்போதே எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் தெரிவித்து இருப்பார் என்றால் சரியல்ல.

3.எனது மகனுக்கும், எதிரிகளுக்கும் குடும்ப விஷயம் தொடர்பாக பிரச்சனை என்றும் அந்த முற்பகையின் காரணமாகத்தான் இந்த புகார் பொய்யாக எனது மகளுக்கு எதிராக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் எனது மகளுக்கும், 2ம் எதிரிக்கும் கள்ள உறவு கிடையாது என்றும், எனது மருமகன் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார் என்ற விபரம் அவரது பிரேத பரிசோதனைக்கு பிறகு நாங்கள் தெரிந்து கொண்டு ஏற்கனவே எனது மகள் மீது இருந்த முன்விரோதம் காரணமாக இந்த புகார் பொய்யாக கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது மகன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்பு நீதிமன்றத்தில் கொடுத்த சாட்சியத்தில் கூட 2–ம் எதிரி ஜெயபாண்டியுடன் எனது மகள் கள்ள உறவில் இருந்தார் என்று பெயர் குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.19 15:57:19 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.